30.08.2023

**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - தொய்யன் வளாகத்தின் - சுற்றறிக்கை**

**அன்பான மாணவர்களே, பெற்றோர்களே, ஆசிரியர்களே!**

**இந்த அறிவித்தல் வளாக மாணவர், பெற்றோர் மற்றும் ஆசிரியரகள் அனைவரின் கவனத்துக்குரிய ஒரு சுற்றறிக்கை ஆகும்.**

**தொய்யன் வளாகத்தோடு தொடர்புடையவர்களுக்கு சில முக்கியமான நிலைப்பாடுகளை அறியத்தரவேண்டிய சூழல் உருவாக்கப்பட்டுள்ள நிலையில் வெளிவரும் அறிக்கை இதுவாகும்.**

நோர்வேத் தமிழர்கள் மத்தியில் உள்ள பொதுநிறுவனங்களில் அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் முதன்மையானது. பல நூற்றுக்கணக்கான மனிதவளங்களின் பங்கேற்போடு சமூகத்தின் அடிமட்டத்தில் இருந்து கீழிருந்து மேலாகவும், அதேவேளை ஒன்றித்த ஒருநிலைப்பட்ட கட்டமைப்பாகத் தன்னைப் பேணும்வகையில், தக்க தலைமை நிருவாகத்தை மத்தியிற் கொண்டு மேலிருந்து கீழாகவும் ஆழமான, தொலைநோக்குத் திட்டத்துடனும் பரவலான பங்கேற்போடும் கட்டப்பட்ட யாப்பின் அடிப்படையில் நோர்வே நாடு தழுவிய ரீதியில் இந்தக் கலைக்கூடம் இயங்கிவருவதை நீங்கள் அறிவீர்கள்.

இவ்வாறு கட்டுக்கோப்புடன் இயங்கிருவரும் நிலையில், இதற்கு முரணாக எமது வளாகத்துக்கும் தலைமை நிருவாகத்துக்கும் கேடு விளைவிக்கும் தன்மையோடு வேண்டுமென்றே திரிபுபடுத்தப்பட்ட வெளிப்படுத்தல்கள் பொதுவெளியில் அண்மைய நாட்களில் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இதனால், இச் சுற்றறிக்கை மூலம் உண்மை நிலையையும், இது தொடர்பான எமது வளாக நிலைப்பாடுகளையும் எமது வளாகத்தோடு தொடர்புபட்ட அனைவருக்கும் தரவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. வளாகத்தின் நிலைப்பாடுகள் பற்றி இங்கு முன்வைக்கப்படும் உறுதிப்படுத்தப்படக்கூடிய தகவல்களைப் பொறுப்போடு கையாளுமாறு அனைவரையும் அன்போடும் பணிவோடும் வேண்டுகிறோம்:

1. அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடத் தொய்யன் வளாகத்தின் நிருவாகச் செயற்பாட்டாளர் ஒருவர் அண்மைக்காலத்தில் நிறுவன நெறிமுறை மீறிய செயற்பாடுகளில் ஈடுபட்டுவந்தமை எமது நிருவாகத்தின் கவனத்துக்கு பலராலும் கொண்டுவரப்பட்டிருந்தது.

2. எமது வளாகத்துக்கு ஏற்பட்டிருக்கும் நிலைமை தொடர்பான ஏகமனதான வளாக நிருவாகத்தின் நிலைப்பாடு அன்னையின் தலைமை நிருவாகத்தின் தொடர்ச்சியான கவனத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டது. மனிதப் பிறழ்வின் அடிப்படையில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று பல தடவைகள் தலைமை நிருவாகத்தைத் தொய்யன் வளாகம் வேண்டிக்கொண்டிருந்தது. மனிதாபிமானத்தோடு மிகுந்த நிதானமாகக் குறித்த விடயத்தைக் கையாளுமாறு தலைமை நிருவாகம் வேண்டிக்கொண்ட நிலையில் பல சுற்றுக்கள் நிதானமாகக் கலந்தாலோசித்து முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

3. மிகுந்த கவனத்தோடும் பொறுப்போடும் குறித்த முறைப்பாடுகள் வளாகத்தின் நிருவாகக் கூட்டங்களில் முறைப்படி நுணுக்கமாக ஆராயப்பட்டு குறித்த நபருக்கு வேண்டிய அறிவுறுத்தல்கள் மூன்று முறை வழங்கப்பட்டன.

4. வளாக நிருவாகத்தின் அறிவுறுத்தல்களின் பின்னரும் அவர் தனது முரண்பாடான செயற்பாடுகளைத் தொடர்ந்து கொண்டிருந்தார். இது மாணவர்களின் கல்விச் செயற்பாட்டுக்கு அவசியமான நிறுவன அமைதிக்குக் குந்தகத்தை ஏற்படுத்தியது. அது மட்டுமன்றி இளைய தலைமுறையினருக்குத் தமது சமூகம் தொடர்பான பார்வை கெடும் வகையிலும் அவரது நடவடிக்கைகள் விசித்திரமான முறைகளில் வெளிப்பட்டன. மாணவர்களின் நலனை முன்னிறுத்திச் செயற்படவேண்டிய நிருவாகத்திற்கு இந்த நிலை நீடிப்பதைத் தொடர்ந்தும் அனுமதிக்கமுடியாத சூழல் தோற்றுவிக்கப்பட்டது.

5. கடும் தொனியில் ஆசிரியர்கள், மாணவர்கள் , பெற்றோர்கள் முன்நிலையில் வாதிடுதல், உரத்த குரலில் பயமுறுத்தல்களை மேற்கொள்ளல், கடும் வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்தல் என்பதாக குறித்த நபரது செயற்பாடுகள் தொடர்ந்தன. இப்படியான நடவடிக்கைகளால் சிலர் கற்பித்தற் பணியை இடைநிறுத்தித் தம்மால் தொடர்ந்து கற்பிக்க முடியாமல் உள்ளதாகவும் அச்சமாக உள்ளதாவும் நிருவாகத்திடம் முறையிட்டுள்ளனர். அது மட்டுமன்றி வளாகத்தில் பணிபுரியும் பெண்கள் தமக்கு அவரின் தகாத மொழிப்பிரயோகச் செயற்பாடுகளினால் வளாக செயற்பாடுகளைத் தொடர்வது கடினமாக இருப்பதாகவும் தமக்கு மன உளைச்சல் ஏற்பட்டிருப்பதாகவும் முறையிட்டனர். கல்விச் செயற்பாட்டிற்காக போடப் பட்ட பல நிருவாக கூட்டங்கள் இவரின் தேவையற்ற விவாதங்களால் கல்விச் செயற்பாடுகளை கதைக்காமலே குழப்பகரமாக முடிவுற்றுள்ளன.

6. அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடப் பெற்றோர்களுடனும் நிருவாக உறுப்பினர் மத்தியிலும் வேண்டத்தகாத முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் வகையில் தனது தனிப்பட்ட கருத்துக்களை அவர் முன்வைத்தார். தொய்யன் வளாகச் சிற்றுண்டிச்சாலைக்கு வருகைதரும் பெற்றோர்களுடன் தான் நிருவாகத்துடன் முரண்படும் விடயங்களைப் பற்றித் திரிபுபட்ட தகவல்களைத் தெரிவித்து, அவர்களிற் சிலரைத் தூண்டிவிட்டு, நிருவாகத்திற்குள் வந்து குழப்பம் விளைவிக்கும் வகையில் ஏவி விடவும் அவர் முயன்றார்.

7. தொடரும் குந்தகமான செயற்பாடுகளைத் தணிக்கும் நோக்கில் இறுதி முயற்சியாக நேரடியாகக் கூட்டம் ஒன்றுக்கு வருமாறு அவரை அழைத்து, அவரோடு கலந்துரையாடி, ஏதேனும் இணக்கம் காண்பதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்பதற்கான முயற்சியும் முன்னெடுக்கப்பட்டது. இதற்காகப் பல அழைப்புகள் அவருக்கு விநயமாக விடுக்கப்பட்டன. ஆனால், அந்த அழைப்புக்களை எல்லாம் உதாசீனம் செய்த அவர் ,அன்னை பூபதி தமிழ்க் கலைக் கூடத்தின் அடிநாதமாக இருக்கும் யாப்பையே தன்னால் ஏற்க முடியாது என்று எழுத்துவடிவிலான தனது நிலைப்பாட்டை எமது வளாகத்திற்கு அனுப்பிவைத்தார்.

8. இவ்வாறு, நிறுவன நெறிமுறை மீறப்படுவதும் மனிதப் பிறழ்வு தொடர்வதும் நீடித்த நிலையில் அவரிடம் நிருவாக ரீதியாக வழங்கப்பட்டிருந்த பொறுப்புகள் களையப்படவேண்டிய தவிர்க்கப்பட இயலாத ஒழுக்காற்று நடவடிக்கைக்கான சூழ்நிலையை அவரே தோற்றுவித்துக்கொண்டார். மேற்குறித்தவற்றுக்கான எழுத்து வடிவம் உள்ளிட்ட ஆதாரங்கள் வளாக நிருவாகத்திடம் உள்ளன. தனியார் இறைமையைக் (personvern) காக்கும் பொறுப்புள்ள நிறுவனமாக அவற்றை நாம் பகிர்ந்துகொள்வதைத் தவிர்க்கிறோம்.

9. இவ்வாறான பின்னணியில், ஒரு தனி மனிதர் மீது எடுக்கப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பாக சில சமூக வலைத்தளங்களில் கருத்துகள் பரிமாறப்படுவதும் ஒரு பொறுப்புள்ள அமைப்பொன்றின் கட்டுப்பாட்டுக்குள் இயங்கவேண்டிய ஊடகம் ஒன்றில் பேட்டி ஒன்று வெளிவந்ததும், இறுதியில் அந்த அமைப்பே உண்மைக்குப் புறம்பான ஓர் அறிக்கையை வெளியிடத் தூண்டப்பட்டதுமாக மக்கள் மத்தியில் பொறுப்பற்ற பொய்ப்பரப்புரை இடம்பெற்றுவருகிறது. இந்தப் பொய்ப் பரப்புரைக்குப் பின்னால் இருக்கும் நிகழ்ச்சிநிரலை எமது வளாகம் வன்மையாகக் கண்டிக்கிறது. குறித்த நிகழ்ச்சிநிரலை ஒரு பொது அமைப்பின் நிலைப்பாடு போலத் திரிபுபடுத்தி பரப்புரைகளை மேற்கொள்ளும் நபர்களை ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தவேண்டியது குறித்த அமைப்பினதும் அதன் பொறுப்பாளர்களதும் பொறுப்பு என்பதைச் சுட்டிக்காட்டவேண்டிய தேவை எழுந்துள்ளது. பலநூறு மக்களின் அர்ப்பணிப்புடன் நோர்வே முழுவதும் இயங்கும் அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடத்திற்கு களங்கம் கற்பிக்க தனிநபர் ஒருவர் மீது எடுக்கப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கையை ஊதிப் பெரிதாக்கும் தீய சக்திகளை இனம் கண்டு அவர்களை வழிப்படுத்துமாறு அனைவரையும் வேண்டுகிறோம்.

10. ஒரு கல்விக் கூடச் செயற்பாட்டில் மனிதப் பண்புகளைப் பாதுகாக்கவேண்டியதும் ஒழுக்கத்தைப் பேணவேண்டியதும் மிகவும் அவசியமானது. மனிதாபிமானக் கரிசனையோடு ,நோர்வே நாட்டு சட்ட திட்டங்களுக்கு ஏற்ப அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் அறத்தின் பாற்பட்டுச் செயற்பட்டுவருகிறது. அன்னை பூபதி தமிழக் கலைக்கூட

நிருவாகத்தின் செயற்பாடு பற்றி ஆராய்ந்த நீதிமன்றத் தீர்ப்பு இதற்கு ஓர் எடுத்துக்காட்டு.

11. நோர்வே பூராகவும் 17 வளாகங்களைக் கிளைபரப்பி நிற்கும் எமது நிறுவனத்தின் அடி நாதமாக உள்ளது யாப்பாகும். யாப்பு என்பதே எமது செயற்பாடுகளின் அடிநாதம். யாப்பை ஏற்காது நிறுவனத்தின் எந்த செயற்பாட்டிலும் எவரும் ஈடுபட முடியாது. ஜனநாயக விழுமியங்களுடன் வருடம் தோறும் இடம்பெறும அன்னை பூபதி தமிழ் கலைக்கூட வளாகங்களின் ஆண்டுப் பொதுக் கூட்டங்களில் எடுக்கப்படும் முடிவுகளின் அடிப்படையில் இயங்கும் எமது வளாகச் செயற்பாட்டில் இருந்து, ஒரு தனிநபர் அல்லது அவரைத் தூண்டிவிட்டு இயங்கும் ஒரு சிலர் , தமக்கு வலுச்சேர்க்கும் வகையில் எடுக்கும் முறைகேடான பொய்ப்பரப்புரைகளைப் பிரித்துத் தெளிவாக இனம் கண்டுகொள்ளுமாறு அனைவரையும் வேண்டுகிறோம்.

எமது பெற்றோர்களும் ஆசிரியர்களும் தனி ஒருவரின் முரண்பாட்டைக் கையாளும் இறுதி வழியாக மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கையைப் புரிந்து கொண்டு, எமது இளையவர்களின் தமிழ் மொழி, கலை, பண்பாடு, வரலாறு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு எமது வளாகச் செயற்பாடுகளுடன் தொடந்தும் பயணிப்பார்கள் என உறுதியாக நம்புகிறோம்.

நன்றி.

த.நகுலேஸ்வரதாஸ்
வளாகப்பொறுப்பாளர்

கு.வள்ளுவன்
உப வளாகப்பொறுப்பாளர்